1996 மே 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வதைப் பொறுத்துதான் அது இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தார்மீகப் பொறுப்பு தி.மு.க. தான் என்று சொன்னால் அது மிகையாகாது. அதற்கு நீங்கள்தான் பொறுப்பு ஏற்றுக் கொள்ளவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, வேடிக்கையாகப் பேசுவதைப்போல் விஷத்தைப் பரப்பிவிடக்கூடாது. *1989*-ஆம் ஆண்டில்தான் விடுதலைப்புலிகள் அல்லது இலங்கைப் போராளிகள் தமிழகத்திலே கால் ஊன்றினார்கள் என்று சொல்வது தவறான தகவல். உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. *1983*-ஆம் ஆண்டிலேயே ஈழப்போராட்டப் போராளிகள் தமிழகத்திலே வந்துவிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்தவேண்டுமேயானால் *1984*-ஆம் ஆண்டு சென்னை மீனம்பாக்கம்--அன்றைக்கு மீனம்பாக்கம் விமானநிலையம் என்று பெயர், இப்போதுதான் அண்ணா பெயராலும், காமராஜர் பெயராலும் அது விளங்குகிறது--அந்த விமான நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டு 40-க்கும் மேற்பட்டவர்களுடைய உடல் சிதறி, விமானநிலையத்திலும் பல இடங்களில் இடிபாடுகள் ஏற்பட்டதை யாரும் மறந்துவிடுவதற்கில்லை. ஆகவே *1983*-ஆம் ஆண்டிலேயே போராளிகள் இங்கு வந்துவிட்டார்கள். தியாகராய நகர் கடைத்தெருவிலேயே போராளிகளுக்குள்ளே ஒருவருக்கொருவர் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. அதற்குப் பிறகு *1989* வரையில் எத்தனையோ வன்முறைச் சம்பவங்களுக்கு தமிழ்நாடு அந்தப் போராளிகளுக்கு இடம் அளிக்கக்கூடிய இடமாக இருந்தது. அப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இங்கே இல்லை என்பதை நான் நினைவுபடுத்துகின்றேன். விடுதலைப் போராளிகளுக்கு, ஈழப் போராளிகளுக்கு ஆதரவு அளிக்காத எந்தக் கட்சியும் தமிழ்நாட்டிலே இல்லை. எல்லாக் கட்சிகளும் தங்களால் இயன்ற அளவுக்கு ஆதரவு அளித்திருக்கின்றன.

முற்பகல் 11-05

என்னுடைய அருமை நண்பர், மறைந்த மாண்புமிகு முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் 4 கோடி ரூபாயை அவர்களுக்கு காசோலையாகவே தந்தது பத்திரிகைகளிலே அப்போது படம் பிடித்துப் போடப்பட்டது. பகிரங்கச் செய்தியாக வந்தது. அதை எம்.ஜி.ஆர். அவர்களும் மறுக்கவில்லை. அந்த அளவுக்கு இலங்கைப்

போராளிகளுக்கு தமிழகத்திலே கால் ஊன்றக்கூடிய இடம் இருந்தது. இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்தபோது தமிழகத்திலே நூற்றுக்கும் மேற்பட்ட முகாம்கள் விடுதலைப் போராளிகளுக்காக அமைக்கப்பட்டிருந்தன. ராஜிவ்காந்தி காலத்திலேகூட அந்த முகாம்கள் இருந்தன. இவைகளையும் யாரும் மறுக்கமுடியாது. 1989–90–லே தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது பத்மநாபா மற்றும் 10 பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள்தான் இதற்குக் காரணம் என்று நான் டெல்லியிலிருந்தவாறே அறிவித்தேன். டெல்லியில் இருந்தேன் அப்போது. செய்தி வந்தவுடன், 'இதற்கு எல்.டி.டி.இ. தான் காரணமாக இருக்கக்கூடும்' என்று நான் நிருபர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன். பிறகு இரண்டுமாதம் கழித்து, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் விடுதலைப் புலிகளுக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த ஆதரவும் அளிக்கவில்லை. ஆதரவு அளிக்க வேண்டும் என்று அறிக்கை விட்டார்கள். அறிக்கைவிட்டது மாத்திரமல்ல. எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலையைத் திறக்க ராஜிவ் காந்தி அவர்கள் வந்தபோது ராஜிவ் காந்தி முன்னிலையிலேயே, அதே மேடையில், ஜெயலலிதா அம்மையார் அவர்கள் தமிழ்நாட்டு மக்கள் விடுதலைப் புலிகளுக்கு, ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆங்கிலப் பத்திரிகைகளான 'இந்து', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகிய இரண்டு பத்திரிகைகளுக்கும் அவர் அளித்த பேட்டியில்--அப்போது அவர்கள் ஆட்சிக்கு வரவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெறுகிறது. அந்தப் பேட்டியில்--அவர்கள் சொன்னார்கள். 'எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப் போராளிகளுக்கு அளித்த அளவிற்கு கருணாநிதி அரசு ஆதரவு அளிக்கவில்லை' என்று சொல்லி என்மீது குற்றம் சாட்டினார்கள். நிருபர்கள் கேட்டார்கள், 'அவர்கள் பத்மநாபாவையே கொலை செய்துவிட்டார்களே, பத்துப் பேரை கொலை செய்து விட்டார்களே, அதற்குப் பிறகு எப்படி ஆதரவு அளிப்பது, என்று கேட்ட போது, செல்வி ஜெயலலிதா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'கடந்த 2 மாதங்களுக்கு முன்பு இந்த நிகழ்ச்சி நடைபெற்றது, இப்போது விடுதலைப் புலிகள் நல்லவர்களாக ஆகிவிட்டார்கள், எனவே, அவர்களுக்கு உதவி அளிப்பது தவறு இல்லை' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது சொல்லப்பட்ட கருத்துக்கள். அது மாத்திரம் அல்ல, பங்களாதேஷை, படையெடுத்துச் சென்று,

எப்படி தனிநாடாக இந்திய அரசு ஆக்கிக்கொடுத்ததோ அதைப்போல இலங்கையிலே படையெடுத்துச் சென்று தமிழ் ஈழத்தை ஆக்கித்தரவேண்டும் என்று சொன்னார்கள். பிரபாகரனுக்கு ஒரு ஆபத்து என்றால் தமிழகம் கொந்தளிக்கும் என்றும் செல்வி ஜெயலலிதா அம்மையார் அவர்கள் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, கால் ஊன்றியது *1989*-க்கு பிறகு அல்ல, *1983*-க்கு முன்பே. அதற்காக நான் ஈழத் தமிழர்களுடைய பிரச்சினையைக் குறைத்து மதிப்பிடமாட்டேன். இன்றைக்கும் அங்கே மடிந்துகொண்டிருக்கிற அப்பாவித் தமிழர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே உள்ள எல்லா இயக்கங்களும் கண்ணீர் வடிக்கத்தான் செய்கின்றன. அந்த அப்பாவித் தமிழர்களை இந்த அபாயத்திலிருந்து மீட்பதற்கு ஒரு அரசியல் தீர்வு காணவேண்டும். மத்தியிலே ஒரு அரசு நிலையாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். அப்படி அமையும்போது இந்தப் பிரச்சினை பற்றி தமிழக அரசு சார்பில் அவர்களிடத்திலே பேசப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையில் மேலவை மீண்டும் கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சிக்கன நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபடுகிறது. அப்படியிருக்க மேலவையைக் கொண்டு வந்தால் எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கட்சிக்காரர்களுக்குப் பதவி கொடுப்பதற்காகத்தான் இந்த மேலவை கொண்டுவரப்படுவதாக பரவலாக வெளியிலே பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

முற்பகல் 11-10

அதுமட்டுமல்ல, தெலுங்கு-கங்கை திட்டத்தின்கீழ் சென்னைக்கு குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கும்போதே, என்.டி. ராமாராவ் அவர்களிடம் இத்திட்டத்திற்காக ரூபாய் கொடுக்கப்பட்டது. பிறகு புரட்சித் தலைவியாலும் ரூபாய் கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு கவர்மெண்ட்டிடமிருந்தும் ரூபாயை ** வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள். அந்தத் திட்ட வேலைகள் இப்போது எந்த நிலையில் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.